நாள்- 01.03.2023

Case No. OS.39/2017

PW.1 - **கண்ணன் –பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். என் தந்தை கந்தசாமிக்கு ஊரில் எவ்வளவு சொத்து உள்ளது என்றால் 3 ஏக்கர் உள்ளது. மேற்படி 3 ஏக்கரையும் நானும், 1ம் பிரதிவாதியும் பாகப்பிரிவினை செய்து சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோம் என்றால் மேற்படி 3 ஏக்கர் சொத்தும் மற்றும் வேறு சில வாங்கிய சொத்துக்களையும் சேர்த்து பாகப்பிரிவினை செய்துகொண்டுள்ளோம். தற்போது நான் சொல்லக்கூடிய சங்கதிகளை நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் முதன்மை சாட்சிய வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் காட்டப்பட்டுள்ள சொத்து யார் சம்பாதித்த சொத்து என்றால் வீட்டு மனைநிலத்தை எனக்கும், 1ம் பிரதிவாதி துரைசாமிக்கும் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட நிலம் ஆகும். எப்போது அரசாங்கத்தால் எங்களுக்கு கொடுக்கப்பட்டது என்றால் 30 ஆண்கள் ஆகிறது. அரசாங்கத்தால் 2017 ஆண்டுதான் கொடுக்கப்பட்டுள்ளது, 30 ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்தாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்துவிரத்தில் காட்டப்பட்டுள்ள 2 சர்வே எண்களையும் நாங்கள் ஏற்கனவே பாகப்பிரிவினை செய்து கொண்ட ஆவணத்தில் காட்டியுள்ளோம் என்றால் இல்லை. மேற்படி எனக்கும், 1ம் பிரதிவாதி துரைசாமிக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது)